## October 29, 2025- தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் எட்டா வது ஊதியக் குழுவை அமைத்து, அதன் பணி வரையறைகளுக்கு (டி.ஓஆர்) மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

i. எட்டாவது ஊதியக் குழு சமர்ப்பிக்கும் ஊதிய உயர்வு தொடர்பான பரிந்துரைகள், வரும் 2026-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதிமுதல் நடைமுறைப்படுத்தப்பட வாய்ப்புள்ளது. ஊதியக் குழு பரிந்துரைகள் மூலம் 50 லட்சம் மத்திய அரசு ஊழியர்களும், 69 லட்சம் ஓய்வூதிய தாரர்களும் பலன்பெறுவர்.

ii. விலைவாசி உயர்வு மற்றும் பண வீக்கத்தின் அடிப்படையில் மத்திய அரசு ஊழியர்களின் அடிப்படை ஊதியம், அகவிலைப்படி, ஓய்வூதிய மற்றும் பிற பணப் பலன்களை மாற்றியமைக்க, ஊதியக் குழுவை அமைத்து பரிந்துரை அதன் அடிப்படையில் ஊதிய உயர்வு, 6 மாதங்களுக்கு ஒருமுறை அகவிலைப்படி உயர்வை மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அந்த வகையில் தற்போது, எட்டாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

iii. உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள எட்டாவது ஊதியக்குழுவில், பெங்களூரு ஐஐஎம் பேராசிரியர் புலாக் கோஷ் பகுதி நேர உறுப்பினராகவும், மத்திய பெட்ரோலிய துறைச் செயலர் பங்கஜ் ஜெயின் உறுப்பினர் செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஊதியக் குழு அமைக்கப்பட்ட 18 மாதங்களில் தனது பரிந்து ரைகளை மத்திய அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

2. தமிழகத்தில் செம்மரங்களை வளர்க்கும் 18 விவசாயிகளுக்கு ரூ.55 லட்சத்தை தேசிய பல்லுயிர் ஆணையம் (என்பிஏ) விடுவித்தது.

i. நாட்டின் உயிரி வளங்களின் நீடித்த பயன்பாட்டை ஊக்குவிக்கும் அணுகல் மற்றும் பயன் பகிர்வு (ஏபிஎஸ்) நடைமுறையின்கீழ் இந்த முன்னெடுப்பை என்பிஏ மேற்கொண்டுள்ளது.

ii. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 8 கிராமங்களைச் சேர்ந்த 18 விவசாயிகளுக்கு தமிழ்நாடு மாநில பல்லுயிர் வாரியம் மூலமாக ரூ.55 லட்சத்தை என்பிஏ விடுவித்தது.

iii. கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் வளரக்கூடிய உள்ளூர் இன மரவகையைச் சேர்ந்த செம்மரம் தற்போது ஆந்திரத்தில் மட்டுமே காணப்படுகிறது. கலாசார, பொருளாதார ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் ஆந்திரம் மட்டுமன்றி தமிழகம், கர்நாடகம், ஒடிஸா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் செம்மரம் வளர்க்கப்படுகிறது. செம்மர விளைச்சலை ஊக்குப்படுத்துவதன் மூலம் விவசாயிகள் வாழ்வாதாரம் மேம்படுவது குறிப்பிடத்தக்கது.

3. செர்பியாவில் நடைபெற்ற 23 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்தசாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் சுஜீத் கல்கல் தங்கப்பதக்கம் வென்று அசத்தினார். போட்டியில் இந்தியாவுக்குக் கிடைத்த ஒரே தங்கப் பதக்கம் இதுவாகும்.

4. இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற கால்நடை சந்தைகளில் ஒன்றான

ராஜஸ்தானின் புஷ்கர் கால்நடை கண்காட்சியில், ரூ.15 கோடி மதிப்பிலான குதிரை, ரூ.23 கோடி மதிப்புகொண்ட எருமை மற்றும் வெறும் 16 அங்குல உயரமே உள்ள பசு ஆகியவை விற்பனைக்கு வந்து பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன.

5. நடப்பு 2025-26 ராபி பருவத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்களை விநியோகிக்கும் வகையில், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்கான மானியமாக ரூ.37,952 கோடியை ஒதுக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்து.

i. இறக்குமதி விலை, ஊட்டச்சத்து தேவை, மானிய சுமை, அதிகபட்ச சில்லறை விற்பனை விலை உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் 'ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய (என்பிஎஸ்) திட்டத்தின் கீழ் உரங்களுக்கான மானிய விகிதம் நிர்ணயிக்கப்படுகிறது.
ii. ராபி (குளிர்கால) பருவத்தின் கீழ், நாட்டின் பல்வேறு பகுதிகளில் விதைப்புப்பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன. கோதுமை, கடுகு, பருப்பு வகைகள் உள்ளிட்டவை ராபி பருவத்தில் பயிரிடப்படும் முக்கியப் பயிர்களாகும்.

6. இந்தியாவில் ரஷியாவின் எஸ்ஜே-100 பயணிகள் விமானத்தை தயாரிக்க மத்திய அரசின் கீழ் செயல்படும் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் (ஹெச்ஏஎல்) ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

i. ரஷியாவின் எஸ்ஜே-100 பயணிகள் விமானம் என்பது இரட்டை என்ஜினுடன் குறுகிய உடல் அமைப்பை கொண்ட விமானமாகும். இதைப் போல, 200-க்கும் மேற்பட்ட விமானங்கள் தயாரிக்கப்பட்டு 16-க்கும் மேற்பட்ட விமான நிறுவனங்களால் இயக்கப்படுகின்றன.
ii. இந்நிலையில், இந்தியாவில் எஸ்ஜே-100 பயணிகள் விமானத்தை தயாரிக்க ஹெஏஎல், ரஷிய அரசின் கீழ் செயல்படும் யுனைடெட் ஏர்கிராஃப்ட் கார்ப்பரேஷன் (யுஏசி) நிறுவனம் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
iii. ரஷிய தலைநகர் மாஸ்கோவில் ஹெச்ஏஎல் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் டி.கே.சுனில், யுஏசி தலைவர் வடிம் படேகா ஆகியோர் முன்னிலையில், ஒப்பந்தம் கையொப்பமானது.
iv. இந்தியாவின் பிராந்திய வான்வழி இணைப்பை உறுதி செய்ய வேண்டும் என்று நோக்கம் கொண்ட 'உடான்' திட்டத்தின் கீழ், குறுகிய தூர விமானப்பயணத்தில் எஸ்ஜே-100 மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.
v. தற்போதைய ஒப்பந்தத்தின் கீழ், இந்தியாவில் உள்நாட்டுப் பயணிகளுக்காக எஸ்ஜே-100 விமான தயாரிப் பின் உரிமைகள் ஹெஏஎல்லிடம் இருக்கும். அத்துடன் இந்த ஒப்பந்தத்தின் மூலம், முதல்முறையாகப் பயணிகள் விமானம் முழுமையாக இந்தியாவில் தயாரிக்கப்பட உள்ளது.

7. தில்லியில் அதிகரித்து வரும் காற்று மாசு பிரச்னையை குறைக்க செயற்கை மழையை பொழியச் செய்வதற்கான சோதனை முயற்சி 53 ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்டது.